**தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு - 249 திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்றுகள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,372,431.26 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அவற்றில் ரூபா 1,361,803.95 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 10,627.31 மில்லியன் அல்லது 0.77 சாவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 621,424.36 | 614,495.63 | 6,928.73 | 1.11 |
| மூலதனம் | 7,626.21 | 5,759.69 | 1,866.52 | 24.48 |

| | | | | |
|---|---|---|---|---|
| அரசாங்க கடனை மீளச்செலுத்துதல் | 743,380.69 | 741,548.63 | 1,832.06 | 0.25 |
| மொத்தம் | 1,372,431.26 | 1,361,803.95 | 10,627.31 | 0.77 |

## 2.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டிற்காக 11 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 64,220 மில்லியன் கூட்டு மொத்தமான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் அந்த மதிப்பீடு ரூபா 46,920 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 75,772 மில்லியன் கூட்டு மொத்த வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது தொடக்க மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் (3) சதவீதத்திற்கும் 2,313 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டிருந்தும் திருத்திய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 3 சதவீதத்திலிருந்து 2,775 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | | உள்ளபடியான வருமானம் திருத்திய வருமான மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | தொடக்க மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | திருத்திய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை/ (பற்றாக்குறை) | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.02.01.99 | 300 | 250 | 7,188 | 6,938 | 2.775 |
| 20.02.02.01 | 4,250 | 4,250 | 3,954 | (296) | (7) |
| 20.02.02.99 | 1,600 | 1,000 | 872 | (128) | (13) |
| 20.03.01.00 | 120 | 120 | 139 | 19 | 16 |
| 20.03.02.99 | 6,000 | 6,000 | 16,074 | 10,074 | 168 |
| 20.03.03.02 | 1,100 | 1,000 | 1,968 | 968 | 97 |
| 20.03.99.00 | 19,000 | 10,000 | 16,824 | 6,824 | 68 |
| 20.05.99.00 | 2,500 | 2,000 | 2,231 | 231 | 12 |
| 20.06.02.00 | 350 | 300 | 407 | 107 | 36 |
| 20.06.04.00 | 14,000 | 14,000 | 18,619 | 4,619 | 33 |
| 30.01.01.00 | 15,000 | 8,000 | 7,496 | (504) | (6) |
| | 64,220 | 46,920 | 75,772 | 28,852 | 61 |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 24901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.50 | 4.45 | 3.00 | 4.24 | 20.00 | 16.94 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டு கணக்கு, இணக்ககூற்றுக்கள் என்பன மேலே பந்தி 1.1 இல் காட்டப்பட்டவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

**பாதீட்டு முரண்**

(i) நிகழ்ச்சித்திட்டம் இலக்கம் 01 இன் செயற்திட்டம் இலக்கம் 04 இற்குரிய 07 செலவு விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 13 சதவீதத்திலிருந்து 79 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

(ii) நிகழ்ச்சித்திட்டம் இலக்கம் 01 இன் செயற்திட்டம் இலக்கம் 02 இற்குரிய 03 செலவு விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 16 சதவீதத்திலிருந்து 86 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

(iii) நிகழ்ச்சித்திட்டம் இலக்கம் 02 இற்குரிய 03 செலவு விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 15 சதவீதத்திலிருந்து 86 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

### 3.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத் தலைவராக 11 வருமான குறியீடுகளின் வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல், கணக்குகளைச் சமர்ப்பித்தல் ஆகிய கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீடுகள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 3.2.1 20.02.01.99 ஆம் இலக்க வருமானக்குறியீடு – ஏனைய குத்தகை வாடகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 300 மில்லியன் தொடக்க வருமான மதிப்பீடானது ரூபா 250 மில்லியனாகத் திருத்தம் செய்யப்பட்டிருந்தும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 7,188 மில்லியனாக இருந்ததனால் அது தொடர்பாக மதிப்பீட்டில் 2,396 சதவீதம் மற்றும் திருத்திய மதிப்பீட்டில் 2,875 சதவீதம் ஆகும். அதற்கிணங்க வருமான மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இந்த வருமானக் கணக்குகளுக்கு கிடைத்த வருமானம், குத்தகை வாடகை ஆகிய உடன்படிக்கைளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் என அவதானிக்கப்பட்டதனால் அந்த வருமானங்களை சரியாக எதிர்வுகூறக்கூடிய சாத்தியம் காணப்பட்டிருந்தும் அதிகளவான முரண்களுடன் எதிர்வுகூறல் மேற்கொண்டிருந்தமை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) 20.02.01.99 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்குரிய வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் 2016 யூலை 29 ஆம் திகதி ரூபா 120 மில்லியன் தொகையான ஒரு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதியானது மேற்கூறிய திருத்திய மதிப்பீட்டு பெறுமதியிலிருந்து வேறுபட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆண்டின் யூன் மாதம் இறுதி வரை இவ்வருமானக் குறியீட்டின் கீழ் சேகரித்த தேறிய வருமானம் ரூபா 134.61 மில்லியனாக இருந்தும் சரியாக திருத்திய மதிப்பீட்டினைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஈ) திணைக்களம் பேணியிருந்த சில கோவைகளை தெரிவு அடிப்படையில் பரீட்சித்த போது அந்த ஒவ்வொரு உடன்படிக்கை சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 1991 திசெம்பர் 09 ஆந் திகதி ஒரு தனியார் கம்பனியுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை 2011 ஆம் ஆண்டளவில் காலாவதியாகியிருந்தும் 2016 ஆம் ஆண்டு தொடர்பான குத்தகை வாடகை ரூபா 14.42 மில்லியன் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியிலிருந்து உடன்படிக்கை ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ii) 4/10/17/220 மற்றும் 4/10/17/221 ஆம் இலக்க அம்பேவெல மற்றும் பட்டிப்பொல உடன்படிக்கைகளின் பிரகாரம் குத்தகை வாடகைப்பணம் ஒவ்வொரு ஆண்டின் செப்தெம்பர் 21 ஆந் திகதி அறவிடப்படவேண்டிய போதிலும் எப்ரல் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் 02 தவணைப் பணமாக அந்த நிறுவனத்திடமிருந்து குத்தகை வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(iii) திருகோணமலை எண்ணைத் தாங்கி தொகுதி தொடர்பாக 2003 பெப்ரவரி 07 ஆம் திகதியிலிருந்து 35 ஆண்டுகள் வரையான காலத்திற்கு China Bay Oil Farm நிறுவனத்துடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அமெரிக்க ஐக்கிய குடியரசின் முன்னைய 05 ஆண்டுகளுக்கான திரண்ட பணவீக்க விகிதத்தின் அடிப்படையில் (Based on the Cumulative rate of inflation of the United States of America for the Preceding (05) Years) அவ்வாடகைப் பெறுமதியானது தன்னிச்சையாக திருத்தம் செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2003 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வருடாந்த வாடகைப் பெறுமதி அமெரிக்க குடியரசு டொலர் 100,000 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டது. இது தொடர்பாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டதாவது இன்று வரை திருகோணமலை எண்ணைத் தாங்கித் தொகுதியின் மேற்பகுதியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் இலங்கை

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை இந்திய பெற்றோலியக் கம்பனியால் தோற்றுவிக்கப்பட்ட பங்குடமை வியாபாரத்திற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததனால் பழைய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகளை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பொது முயற்சிகள் திணைக்களத்தால் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

(iv) ஒரு தனியார் கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்ட 2009 யூன் 01 திகதிய 283 ஆம் இலக்க உடன்படிக்கையானது 2011 மே 31 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பின்னர் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது இன்னும் எட்டு ஆண்டுகளால் அதாவது 2019 மே 31 ஆந் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தும் அது தொடர்பான முறையான உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 20.02.01.00 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்கு ஏனைய நிறுவனங்களால் சேகரிக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 7,061,322,141 தொகையும் காணப்பட்டதுடன் 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக்கொள்கை சுற்றறிக்கையானது அரசாங்க வருமானங்களை மதிப்பீடு செய்தல், சேகரித்தல், கண்காணித்தல், அறிக்கையிடல் தொடர்பான வழிகாட்டியின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கை முறைப்படியாக பேணப்படவேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அத்தகவல்கள்/ கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக பெற்றுக்கொள்ளளப்பட்ட வருமானங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. மேலும் 2016 திசெம்பர் 30 ஆந் திகதிய 01/2015(V) ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் மூலம் மேலே குறிப்பிட்ட 04 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தலானது உரிய வருமானங்களைச் சேகரிக்கின்ற அமைச்சு/திணைக்களம் மற்றும் நிறுவனத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தும் அச்சுற்றறிக்கையும் 2016 திசெம்பர் 26 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் யூன் மாதத்தில் பாசிக்குடா காணிக்காக ரூபா 61.40 மில்லியன் நிதி இக்கணக்கிற்கு மாற்றறப்பட்டிருந்ததுடன் அதற்குரிய சிபார்சுகளும் அங்கீகாரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 20.02.02.01 ஆம் இலக்க வருமானக் குறியீடு – கடன் வழங்குதலும் வட்டியும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக ரூபா 4,250 மில்லியன் வரையான ஆரம்ப வருமான மதிப்பீட்டிற்கு சமமான பெறுமதியில் அல்லது ரூபா 4,250 மில்லியன் வரை மதிப்பீடு திருத்தப்பட்டிருந்ததுடன் சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 3,954 மில்லியன் அளவில் இருந்ததன் காரணமாக அது வருமான மதிப்பீட்டில் 93 சதவீதமாகும்.

(ஆ) இவ்வருமான குறியீட்டிற்குரிய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் 2015 யூலை 31 ஆந் திகதி ரூபா 3,478 மில்லியன் தொகையான தொடக்க மதிப்பீடும் 2016 யூலை 30 ஆந் திகதி ரூபா 3,989 மில்லியன் தொகையான திருத்திய மதிப்பீடும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அது ரூபா 4,250 மில்லியனாகத் திருத்தப்பட்டதன் காரணமாக உள்ளபடியான வருமானம் மேற்கூறியவாறு 93 சதவீதமாக இருந்தும் வருமானக்கணக்கீட்டு உத்தியோகத்தரால் வேண்டிக் கொண்டவாறு திருத்தப்பட்டிருக்கு மேயானால் அது 99 சதவீதமாக இருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்வாறு கடனை மீள அறவிடுதல் வருமானக் கணக்கின் பிரகாரம் உப கடன் மீதி ரூபா 164,753.30 மில்லியனாக இருந்ததுடன் அதற்குரிய வட்டியை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. நிலுவை வருமான அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டவாறு 08 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடனுக்காக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய வட்டி ரூபா 1,823.80 மில்லியனாக இருந்தது.

(ஈ) தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு நீர் வள மற்றும் நீர்வழங்கல் சபையிடமிருந்து அறவிடவேண்டிய கடன்வட்டி ரூபா 2,912 தொகையை மூலதனமாக்குதல் தொடர்பாக கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய மிகுதிச் செயற்பாடுகள் எடுக்கப்பட்டமைக்கான சான்று கணக்காய்வுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) கடந்த ஆண்டிற்கான கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் கடன் வட்டியை அறவீடு செய்தல் சம்பந்தமாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பியிருந்த போதிலும் அதன் பின்னர் மீளாய்வாண்டிற்காக அது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

### 3.2.3 20.02.02.99 ஆம் இலக்க வருமானக் குறியீட்டு – வட்டியும் ஏணைய வருமானங்களும்

2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 1,600 மில்லியன் தொடக்க வருமான மதிப்பீடு ரூபா 1,000 மில்லியனாகத் திருத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 872.32 மில்லியனாக இருந்ததனால் அது தொடக்க மதிப்பீட்டில் 55 சதவீதம் மற்றும் திருத்திய மதிப்பீட்டில் 87 சதவீதம் ஆகும். அதற்கிணங்க மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.2.4 20.03.01.00 ஆம் இலக்க குறியீடு – திணைக்களம் சார்ந்த விற்பனைகள்

2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 120 மில்லியன் தொகையான தொடக்க வருமான மதிப்பீடு ரூபா 120 மில்லியனாகத் திருத்தப்பட்டு அதாவது அப்பெறுமதிக்குச் சமமான பெறுமதியாக திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 139 மில்லியனாக இருந்ததனால் அது மதிப்பீட்டில் 116 சதவீதமாகும். அதற்கிணங்க வருமானம் மதிப்பீடு செய்தல் நடைமுறைச் சாத்தியமாக இல்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.2.5 20.03.02.99 ஆம் இலக்க வருமானக் குறியீடு – நிருவாகம் சார்ந்த கட்டணங்களும் கொடுப்பனவுகளும் - நானாவிதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 6,000 மில்லியன் தொகையான வருமான மதிப்பீடு ரூபா 6,000 மில்லியனாகத் திருத்தப்பட்டு அதாவது அதே பெறுமதிக்குச் சமமான பெறுமதியாக திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 16,074 மில்லியனாக இருந்ததனால் அது மதிப்பீட்டில் 268 சதவீதமாகும். அதற்கிணங்க வருமானங்களை மதிப்பீடு செய்தல் நடைமுறைச் சாத்தியமாக இல்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேற்கூறிய தேறிய வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் மீதி/ பணம் இக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தும் அதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட சிபார்சு/ அங்கீகாரம் திணைக்களத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | தொகை |
|---|---|
| பிரதான பேரேட்டில் செயற்படாது காணப்பட்ட 8233 ஆம் இலக்க கணக்கின் மீதி | 1,268.67 |
| பொது வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட செலவு மீதி | 1,227.47 |
| பங்களிப்புச் செய்தல் ஒய்வூதிய முறைமையின் கீழ் இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமாப நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணம் | 2,833.32 |
| மொத்தம் | 5,329.46 |

(இ) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 இலக்க அரசாங்க நிதிக் கொள்கைச் சுற்றறிக்கையின் 04 (ஆ) பந்தியின் பிரகாரம் அறவிடவேண்டியுள்ள நிலுவைப் பணம் மேலும் கூட்டுச்சேர்வதனைத் தவிர்த்துக் கொள்வதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கணக்கின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான ரூபா 915,768 கூட்டு மொத்தமான நிலுவைப் பணம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிலுவைப் பணமாகிய ரூபா 75,000 இல் எந்த தொகையும் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.2.6 20.03.03.02 ஆம் இலக்க வருமானக் குறியீடு – தண்டப்பணமும் அரசுடைமையாக்குதலும் - ஏனையவை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 1,100 மில்லியன் தொகையான வருமான மதிப்பீடு ரூபா 1,000 மில்லியனாகத் திருத்தப்பட்டிருந்தும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 1,968 மில்லியனாக இருந்ததனால் அது தொடக்க மதிப்பீட்டில் 178 சதவீதம் மற்றும் திருத்திய மதிப்பீட்டில் 197 சதவீதமாகும். எவ்வாறாயினும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் வேண்டிக் கொண்டவாறு திருத்தப்பட்டிருக்குமானால் அதுவும் 179 சதவீதமாக இருந்திருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேற்கூறிய விடயங்களின் காரணமாக தொடக்க மதிப்பீட்டினைப் போல திருத்திய மதிப்பீடும் நடைமுறைச் சாத்தியமானதாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.7 20.03.99.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு – விற்பனைகளும் கட்டணங்களும் (ஏணைய பெறுவனவுகள்)**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 19,000 மில்லியன் தொகையான தொடக்க வருமான மதிப்பீடு ரூபா 10,000 மில்லியனாகத் திருத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 16,824 மில்லியனாக இருந்ததன் காரணமாக அது தொடக்க வருமான மதிப்பீட்டில் 89 சதவீதம் மற்றும் திருத்திய வருமான மதிப்பீட்டில் 168 சதவீதமாகும்.

(ஆ) 2016 யூலை 29 ஆந் திகதி வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் ரூபா 4,900 மில்லியன் தொகையான திருத்திய மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அது ரூபா 10,000 மில்லியனாகத் திருத்தப்பட்டதன் காரணமாக உள்ளபடியான வருமானம்

மேற்கூறியவாறு 168 சதவீதமாக இருந்த போதிலும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் வேண்டிக் கொண்டவாறு திருத்தம் செய்யப்பட்டிருக்குமாக இருந்தால் அது 343 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மேற்கூறிய விடயங்களின் காரணமாக தொடக்க மதிப்பீட்டினைப் போல திருத்திய மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**3.2.8 20.05.99.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு உள்ளமையை ஒப்படைத்தல் - தேசிய லொத்தர் சபையும் ஏனைய ஒப்படைத்தல்களும்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,500 மில்லியன் தொகையான வருமான மதிப்பீடு ரூபா 2,000 மில்லியனாகத் திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 2,231 மில்லியனாக இருந்ததனால் அது தொடக்க மதிப்பீட்டில் 89 சதவீதம் மற்றும் திருத்திய மதிப்பீட்டில் 111 சதவீதமாகும்.

(ஆ) 2016 யூலை 29 ஆந் திகதி வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் ரூபா 2,100 மில்லியன் தொகையான திருத்திய மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அது ரூபா 2,000 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தமை காரணமாகவும் உள்ளபடியான வருமானம் மேற்கூறியவாறு மதிப்பீட்டில் 111 சதவீதமாக இருந்தும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் வேண்டிக் கொண்டவாறு திருத்தம் செய்யப்பட்டிருக்குமாயிருந்தால் அது 106 சதவீதம் அளவில் இருந்திருக்குமென அவதானிக்கப்பட்டது.

(இ) இவ்வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 2,000 மில்லியன் வருமானங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மேற்கூறியவாறு உள்ளபடியான வருமானம் 223 மில்லியனாகும். எவ்வாறாயினும் லொத்தர் வருமானத்திலிருந்து மீளச்செலுத்தலுக்காக 249-1-1-1503-01 ஆம் செலவு விடயத்தின் கீழ் ரூபா 600 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அதில் ரூபா 470 மில்லியன் மாத்திரம் மீளச்சசெலுத்தப்பட்டிந்ததனால் அது மொத்த வருமானத்தில் 21 சதவீதத்தினைக் கொண்டிருந்தது.

(ஈ) ஆரோக்கிய மண்டபங்களுக்காக தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளை புனரமைக்கும் நடவடிக்கைகளுக்காக நிதிகளை சேகரிக்கும் நோக்கத்துடன் 1995 ஆகஸ்ட் 31 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தை கவனத்தில் கொண்டு சுகாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சுகாதார அபிவிருத்தி லொத்தர் நடாத்தப்பட்டிருந்தது. 1998 இன் 22 ஆம் இலக்க நிதி (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 7(4) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சு செயலாளரின் மூலம் லொத்தர் வருமானத்தில் சபையின் அங்கீகரிக்கப்பட்ட செலவுகளை கழித்த பின்னர் எஞ்சிய பணம் திரட்டு நிதிக்கு செலவு வைக்கப்பட வேண்டும். லொத்தரின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தற்போதைய திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு 10 சதவீதமாக இருந்ததுடன் அது 2007 ஆம் ஆண்டின் போது 15 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. லொத்தரின் விலை ரூபா 10 இலிருந்து ரூபா 20 வரை உயர்த்தப்படும் வரையும் அல்லது விற்பனை மேம்படுத்தப்பட்டதன் பின்னர் மற்றும் ஒரு ஆண்டிற்கு மாத்திரம் நடாத்தபடுவதன் கீழ் லொத்தரின் பங்களிப்பு 2008 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் 10 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2008 ஆம் ஆண்டு முதல் லொத்தர் விலை ரூபா 10 இலிருந்து 20 வரை உயர்த்தப்பட்டிருந்தும் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் லொத்தர் விற்பனை வருமானமும் 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில்

முறையே 17 சதவீதம், 23 சதவீதம், 32 சதவீதம், 34 சதவீதம் என்பனவாக அதிகரித்திருந்தும் தேசிய சம்பத லொத்தரின் சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கான பங்களிப்பு 10 சதவீதமாகவே காணப்பட்டது. இதன் காரணமாக உரிய கோவைகளில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஒக்தோபர் வரை சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு இழப்பாகியுள்ள பணம் ரூபா 152,932,790 ஆகும்.

(உ) சுபிரி வாசனா சம்பத் லொத்தரின் வருமானத்தில் 5 சதவீத பங்களிப்பு அங்கவீனர்களுக்கான தேசிய நிதியத்திற்கு பங்களிப்பை வழங்குவதுடன் 2010 ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது 10/1683/442/009 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் இச்சதவீதத்தை 5 சதவீதத்திலிருந்து 8.25 சதவீதம் வரை அதிகரிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் 2017 மே 30 ஆந் திகதி வரை அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சுபிரி வாசனா சம்பத் லொத்தரின் வருமானத்தில் 10 சதவீதம் திரட்டு நிதியத்தினூடாக தேசிய விளையாட்டுக்கள் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தும் 2013 யூலை மாதத்திலிருந்து அப்பங்களிப்பு சதவீதம் முறையான அங்கீகாரமின்றி 5 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது.

(எ) ரணவிரு சேவா அதிகாரசபையின் மூலம் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களில் தங்கிவாழ்பவர்களுக்காக பல நலன்புரிச் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன் பாதுகாப்பு அமைச்சின் தகவல்களின் பிரகாரம் அச்செயற்திட்டங்களுக்கு தேவையான நிதி ஏற்பாட்டை வழங்குவதற்காக அதிகாரசபை ஆரம்பத்தில் காணப்பட்ட ஜயவிரு லொத்தர் வருமானத்தில் 30 சதவீத பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது. 2011 மார்ச் முதலாம் வாரத்திலிருந்து இந்த ஜயவிரு என்ற பெயர் சுபிரி வாசனா சம்பத் என மாற்றம் செய்து பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் மாத்திலிருந்து அப்பங்களிப்பு 10 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. உரிய கோவையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரணவிரு சேவா அதிகாரசபைக்கு இழக்கப்பட்ட வருமானம் 2011 திசெம்பர் மாதத்திலிருந்து 2016 திசெம்பர் மாதம் வரை ரூபா 940,095,600 ஆக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஏ) தேசிய லொத்தர் சபையானது 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் மூலம் லொத்தர்களை நடாத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட ஒரு நிறுவனமாக உள்ளதுடன் அதிகாரச்சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் லொத்தர்களை நடாத்துதல் பல்வேறு அமைச்சுக்களுக்காகவும் இடம்பெறுகின்றன. பல்வேறு அமைச்சுக்களுக்காக நடாத்தப்படுகின்ற லொத்தர்களுக்காக மொத்த வருமானத்தில் பங்களிப்பானது சதவீத அடிப்படையில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய அமைச்சுக்கு அரசாங்கத்தின் திரண்ட நிதியினூடாக வழங்கப்படுகின்றன. இவ்வாறு அமைச்சுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டிற்காக அவ்வமைச்சுக்களின் பல்வேறு குறிக்கோள்களுக்காக அமுல்படுத்தப்படும் நிதியங்களுக்காக பங்களிப்பை வழங்குகின்ற அதேவேளை அச்சதவீதங்களை குறைப்பதன் மூலம் நிதியங்களுக்கு/நிறுவனங்களுக்கு லொத்தர்களின் மூலம் கிடைக்கின்ற பங்களிப்பு குறைவதன் மூலம் உரிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வது சிக்கலானது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஐ) ஆண்டின் போது 08 லொத்தர்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,226 மில்லியன் பணம் உரிய லொத்தர்கள் தோற்றுவிக்கப்பட்ட குறிக்கோள்களுக்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2.9 20.06.02.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு - மூலதனச் சொத்துக்களை விற்பனை செய்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 350 மில்லியன் தொகையான தொடக்க வருமான மதிப்பீடு ரூபா 400 மில்லியனாகத் திருத்தம் செய்வதற்கு திணைக்களத்தால் வேண்டிக் கொண்டிருந்தும் அது ரூபா 300 மில்லியனாகத் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இவ்வருமான மூலங்களுக்காக வருடத்தின் போது சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 407 மில்லியனாக இருந்ததனால் அது தொடக்க மதிப்பீட்டில் 116 சதவீதம் மற்றும் திருத்திய மதிப்பீட்டில் 136 சதவீதமாகும்.

**3.2.10 20.06.04.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு – கடனை மீள அறவீடு செய்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான ரூபா 14,000 மில்லியன் தொகையான தொடக்க வருமான மதிப்பீடு உள்ளதுடன் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 18,619 மில்லியனாக இருந்ததன் காரணமாக அது வருமான மதிப்பீட்டில் 133 சதவீதமாகும். எவ்வாறாயினும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்ட தொடக்க மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடு முறையே ரூபா 12,569 மில்லியன் மற்றும் ரூபா 14,949 மில்லியனாக இருந்ததுடன் அத்திருத்திய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருக்குமாயிருந்தால் மேற்கூறிய 133 சதவீதமான முரண் 124 சதவீத பெறுமதியைக் கொண்டிருக்கக் கூடியதாக இருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட உப கடன் மீதியினுள் ஒவ்வொரு கடன் மீதிக்குரிய தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சில கோவைகளைப் பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1999 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த முறையே ரூபா 550.99 மில்லியன் மற்றும் 222.35 மில்லியன் தொகையான கடன் பணத்தில் எப்பணத்தையும் அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(ii) 1992 ஆம் ஆண்டின் போது குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக கடன் வழங்குவதற்கு சனச சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 11.11 மில்லியன் கடன் பணத்தில் எப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு 3 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 116 மில்லியன் தொகையான கடன் பணத்தில் ரூபா 111.6 மில்லியன் பணத்தை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(iv) வாழைச்சேனை மற்றும் எம்பிலிபிட்டியவில் அமைந்துள்ள இரண்டு கடதாசி தொழிற்சாலைகளின் இயலளவை அதிகரிப்பதற்காக வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 50 மில்லியன் வட்டியற்ற கடன் பணத்தில் எப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2007 ஒக்தோபர் 01 ஆந் திகதி பங்கதெனிய ஓட்டுத் தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு மிகையூதியம் வழங்குவதற்காக இலங்கை மட்பாண்டக் கூட்டுதாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 9.4 மில்லியன் வட்டியற்ற கடன் பணத்தில் ரூபா 8.68 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(v) கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கான புதுப்பிக்கக்கூடிய வலு செயற்திட்டத்திற்காக (RERED) ஒரு கம்பனிக்கு 2002 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,332 மில்லியன் தொகையான கடன் பணத்தில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 422 மில்லியன் மீதி அறவிட வேண்டியதாக இருந்தது.

(vi) 1993 மார்ச் 10 ஆந் திகதி ஆசிய அபிவருத்தி வங்கியிடமிருந்து ADB 1204 (SRI) SF இலக்க உடன்படிக்கையின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 276.75 கடன் பணமானது மாநகரசபை மற்றும் நகரசபைச் செயற்திட்டங்களுக்காக உப கடனாக வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டுக் கடன் பணம் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு 02 ஆண்டுகள் சலுகைக் காலத்துடன் 22 ஆண்டுகளில் செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அவற்றில் வழங்கப்பட்ட முழுமையான உப கடன் பணமாகிய ரூபா 276.75 மில்லியன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி நிலுவையாகக் காணப்பட்டது.

(vii) தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்ட கடனில் 2016 சனவரி 01 ஆந் திகதி நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 4,772.41 மில்லியன் தொகையான கடன் மீதிகளில் எப்பணத்தையும் அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. பசுக்களை கொள்வனவு செய்வதற்காக நெதர்லாந்து மற்றும் அவுஸ்ரேலியாவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்க டொலர் 12.944 மில்லியன் கடன் பணத்திலிருந்து வழங்கப்பட்ட இக்கடன் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது அக்கடனைச் செலுத்துவதற்கு தேசிய கால்நடை அபிவிருத்தி சபை இணங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேலே கூறிய நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(viii) 2013012 SL ஆம் இலக்க கடனின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் பணத்திலிருந்து மில்கோ நிறுவனத்தின் தொழிற்சாலையை புனரமைப்பதற்காக (பகுதி I) கட்டம் I மற்றும் II இன் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன்களில் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை முறையே ரூபா 350.68 மில்லியன் மற்றும் 309.31 மில்லியன் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.2.11 30.01.01.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு – வெளிநாட்டு மானியம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்காக ரூபா 15,000 மில்லியன் தொகையான தொடக்க வருமான மதிப்பீட்டு பின்னர் ரூபா 8,000 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 7,495.97 மில்லியன் அளவில் இருந்ததனால் அது தொடக்க மதிப்பீட்டில் 50 சதவீதம் மற்றும் திருத்திய மதிப்பீட்டில் 94 சதவீதமாக இருந்தது. அதற்கிணங்க தொடக்க மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) பணம், பொருட்கள் அல்லது சேவைகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட உதவி மாத்திரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் மூலம் கணக்கீடு செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக வெளியக வளங்கள் திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அதாவது வெளிநாட்டு உதவிகளை பற்றுக் கொள்வதற்காக ஏற்படுகின்ற நிர்வாகச் செலவுகள் முதலிய ஏனைய செலவுகள் உரிய நன்கொடையளிக்கும் நிறுவனம்

தமது உதவியில் உள்ளடக்கியுள்ள சந்தர்ப்பங்களின் போது அந்த ஏனைய செலவுகளும் மானிய உதவியின் ஒரு பகுதியாக கணக்கீடு செய்யும் வகையில் சயற்திட்டங்களை அமுல்படுத்துகின்ற அமைச்சுக்கள்/ திணைக்களங்களிடமிருந்து தகவல்கள் கிடைக்காமையின் காரணமாக அச்செலவுகள் உதவியின் ஒரு பகுதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) இலங்கைக்கு கிடைக்கின்ற அனைத்து வெளிநாட்டு மானிய உதவிகளும் வெளியக வளங்கள் திணைக்களத்தினூடாகக் கிடைப்பதற்குத் திட்டமிடப்பட வேண்டுமென அனைத்து உதவி வழங்கும் நாடுகளுக்கும்/நிறுவனங்களுக்கும் அதே போல அனைத்து அரசாங்க அமைச்சுக்கள்/திணைக்களங்களை உள்ளடக்கி அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. சில சந்தர்ப்பங்களில் இந்த ஆலோசனைக்கு முரணாக உரிய அரசாங்க நிறுவனங்களால் மானியம் வழங்கும் நிறுவனம் மற்றும் ஒருங்கிணைப்பாளர் நேரடியாக வெளிநாட்டு மானியங்களைப் பெற்றுக் கொள்கின்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டதாக வெளியக வளங்கள் திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த வருமானக் கணக்கில் உள்ளடக்கப்படாத அவ்வாறான உதவி மானியங்கள் காணப்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

(iv) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானக் கணக்கில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானமாக ரூபா 7,495.97 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்தும் அப்பணம் வெளிநாட்டு மானியத்தினைப் பயன்படுத்தி மேற்கொண்ட செயற்திட்டங்களின் மூலம் மேற்கொணட செலவுகள் மாத்திரம் என்பது அவதானிக்கப்பட்டது. அம்முறைமையை பின்பற்றுவதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைத்த ரூபா 4,163 மில்லியன் வெளிநாட்டு மானியம் இந்த வருமானக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அந்நிலைமையில் சேகரித்த ஒட்டுமொத்த வெளிநாட்டு மானியம் இந்த வருமானக் கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(v) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கூறிய மானியமாக வருமானக் கணக்கில் கணக்கீடு செய்யப்படாத மீதியின் காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| கால எல்லை | தொகை |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 01 ஆண்டை விட குறைந்தவை | 1,250.41 |
| 01 ஆண்டிலிருந்து 03 ஆண்டுகள் வரை | 2,903.07 |
| 04 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | 0.43 |
| 06 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | 9.11 |
| | 4,163.02 |

(vi) மீளாய்வாண்டின் ஆரம்பம் வரை மானியமாக் கிடைத்த ரூபா 2,900.13 மில்லியன் தொகை 28 பொது வைப்புக் கணக்குளில் ஆண்டின் இறுதி வரை வைத்திருக்கப்பட்டதுடன் அப்பணம் உரிய குறிகோள்களுக்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த மீதியில் 05 ஆண்டுகளை மிகைத்த மீதியும் காணப்பட்டன.

(vii) மானியமாகக் கிடைத்த ரூபா 8.57 மில்லியன் பணம் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த தவறியதன் காரணமாக மீளாய்வாண்டின் போது அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது எவ்வாறாயினும் நிதி குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின் பணம் இவ்வாறு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டதாக திணைக்களம் தெரிவித்தது.

(viii) ஒவ்வொரு செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு நிறுவனம் மற்றும் அரசாங்கங்களிடமிருந்து பெற்ற வெளிநாட்டு மானியம் அச்செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு 09 செயற்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 11,341.18 மில்லியன் பணம் மீளாய்வாண்டின் போது அச்செயற்திட்டங்களுக்குரிய அமைச்சு/திணைக்களத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் மானியம் வழங்கியவர்களுக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது.

(ix) 6000-10-1152 ஆம் இலக்க கணக்கின் கீழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மேம்படுத்துவதற்காக 2006 சனவரி 17 ஆந் திகதி பாராளுமன்ற மீளமைப்பு மற்றும் வெகுசனத்தொடர்பு விவகார அமைச்சின் மானியமாகக் கிடைத்த ரூபா 2.26 மில்லியன் பணம் 2017 மே 31 ஆந் திகதி வரை உரிய செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 பெது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்கள தலைப்பின் கீழ் சாதாரண பொது வைப்புக் கணக்கிற்கு மேலதிகமாக ஆரம்பிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்குள் 364 ஆக இருந்ததுடன் அவற்றில் மீதி எதுவும் இல்லாத 194 கணக்குள் காணப்பட்டன 2015 மற்றும் 2016 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இல்லாது மீதிகள் மாத்திரம் காணப்பட்ட கணக்குகள் 15 ஆக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறாது காணப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 19 ஆகும். மீதி இல்லாதிருந்தும் முன்னைய காலத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை தேடிக்கண்டுபிடிப்பதற்குத் தேவையிருந்ததன் காரணமாக கணக்குகள் மூடப்படவில்லை என திணைக்களம் தெரிவித்திருந்தது.

(ii) 2015 ஆம் ஆண்டின் இறுதியில் 20 ஆண்டுகளுக்கு மேல் பழமையான ரூபா 35.12 மில்லியன் வரவு மீதி காணப்பட்ட ஒரு கணக்கு (6000/0000/00/0010/0237/000) காணப்பட்டதுடன் அக்கணக்கில் 2015 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

**3.4 நல்லாட்சியும் கணக்களித்தன்மையும்**

**வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் கொள்வனவுத் திட்டமும்**

2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திற்கும் கொள்வனவுத் திட்டத்திற்குமிடையே வேறுபாடு காணப்பட்டதன் காரணமாக கொள்வனவுத் திட்டமும் வரவு செலவுத் திட்டமும் இணங்கியிருக்காததுடன் உரிய நாளதுவரையாக்குதலும் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 யூலை 28 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் பல முறைமைகளில் மீள்மதிப்பு பெறுமதி தீர்மானிக்கப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீள்மதிப்பு செய்யும் உறுதியான முறைமையானது உரிய அறிவுறுத்தல்களுக்குள் இருக்கவில்லை என திணைக்களம் தெரிவித்திருந்தது.

### 3.6 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

#### (அ) திறைசேரி பிணைமுறி பரிசோதனை – 2016

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 4.5 சதவீதமான பிணைமுறி எல்லையானது 2003 இன் 15 ஆம் இலக்க திருத்திய அதிகாரச் சட்டத்தினால் 7 சதவீதம் வரையும் 2016 ஆகஸ்ட் மாதம் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட 13 ஆம் இலக்க திருத்தத்தின் மூலம் 2016 சனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் வகையில் 10 சதவீதம் வரையும் திருத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2014 ஆம் ஆண்டு வரை அதிகாரச் சட்டத்திலுள்ள எல்லையானது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 133 சதவீதத்தாலும் 2016 ஆம் ஆண்டளவில் அது 233 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன.

(ii) 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ ‘‘பொறுப்புக்கள்’’ அதிகாரச் சட்டத்தின் (2) ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தின் கொள்கை தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போது எதிர்கால சமூகத்திற்காக ஏற்படுத்தக்கூடிய நிதிப் பாதிப்புக்களைப் பற்றி கவனத்தில் கொண்டு அத்தீர்மானம் எடுக்கப்படுகின்றது என்பது சான்றுபடுத்தப்பட வேண்டும் என்ற போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது மிகவும் நீண்ட காலம் அதாவது 40 ஆண்டுகள் வரை தாக்கம் ஏற்படுத்தக்கூடிய வகையில் திறைசேரி பிணைமுறிகள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டிற்கு முன்னரும் அவ்வாறு 10 ஆண்டுகளாகிய மிகவும் நீண்ட காலத்திற்கு அமுலுக்குவரும் வகையில் திறைசேரி பிணை முறிகள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. எவ்வாறாயினும் இது தொடர்பாக பொருண்மையான மற்றும் விபரமான பரிசோதனைகள் இடம்பெற்றமைக்கான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பிணைமுறிக் கோவைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- பிணைமுறியின் காலம் காலத்திற்கு காலம் நீடிக்கப்பட்டிருந்தும் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை.
- பாதீட்டு நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அச்சந்தர்ப்பத்தின் போது காலாவதியாகியிருந்த பிணைமுறிகளின் பணம் தீர்த்துவைக்கப்படாமை.
- பிணைமுறிகளுக்குரிய கடன் பணத்தை தீர்த்து வைப்பதற்கான எதிர்காலத் திட்டங்கள் / நடைமுறைகள் தொடர்பாக போதியளவில் நிலையான விசாரணைகளுக்கு நடவடிக்கை எடுக்காமை.

- உரிய அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் உரிய அங்கீகாரம் அளிக்கும் கடிதங்களில் கடன் கால எல்லை பிணைமுறியின் கால எல்லை அல்லது கடன் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வங்கி தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்காமை. சிக்கல்கள் சம்பந்தமாக திறைசேரியானது பொருத்தமான எதிர்கால நடவடிக்கைகளை எடுத்து உரிய நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாது தற்காலிக நடைமுறையாக மேலும் கடன் வழங்குதல் / கடனுக்காக பிணையிருத்தல் இடம்பெறாமை.

- பிணைமுறிகளை இரத்து செய்யும் போது மூலப்பிரதிகளைப் பெற்றுக் கொண்டிருக்காமை.

(iv) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்காக 2012 யூன் 27 ஆந் திகதியிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஐக்கிய அமெரிக்க டொலர் 200 மில்லியன் தொகையான பிணைமுறி வழங்கப்பட்டிருந்ததுடன் இத் திறைசேரி பிணைமுறியின் காலம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது. காலம் நீடிக்கப்படாத பிணை முறிகளை இரத்துச் செய்வதற்கு அல்லது அது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும் உரிய பிணை முறிகளை காலநீடிப்புச் செய்யாமைக்கு பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்துள்ளதாகவும் கடன் இன்னும் தீர்த்து வைக்கப்படாது காணப்படுவதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**(ஆ) விவசாயப் பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் சுழற்சி நிதியம்**

---

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் விவசாயப் பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் சுழற்சி நிதியத்தில் ரூபா 1,999.03 மில்லியன் மற்றும் ரூபா 237.41 மில்லியன் இரண்டு வருமானத் தலைப்புக்களுக்கு செலவு வைக்கப்பட்டு நிதியத்தின் காசுப் புத்தக மீதி தீர்த்து வைக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதிவரை தீர்த்து வைக்கப்படாத கடன் மீதி ரூபா 155.56 மில்லியனாக இருந்தது.

**(இ) கட்டுநிதிகளை விடுவித்தல்.**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளுக்காக விடுவிக்கப்பட்ட கட்டுநிதி முறையே ரூபா 2,447,059 தொகை, ரூபா 360,226 தொகையாகவும் மற்றும் ரூபா 2,453,882 தொகை மற்றும் ரூபா 390,588 தொகையாகவும் இருந்தன. அதற்கிணங்க 2016 ஆம் ஆண்டின் போது மூலதனச் செலவுகளுக்காக கட்டுநிதியை விடுவித்தலானது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 30,362 மில்லியனால் அதாவது 8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. கடனை மீளச் செலுத்துவதற்காக கட்டுநிதியை விடுவித்தல் மீளாய்வாண்டின் போது ரூபா 90,323 மில்லியனால் அதாவது 11 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் கடனுக்கான வட்டியைச் செலுத்துதல் ரூபா 71,896 மில்லியனால் அதாவது 14 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டில் அமைச்சு மற்றும் திணைக்களத்திற்காக மீண்டுவரும் செலவுகளுக்கான கட்டுநிதி எல்லைகள் மற்றும் அதற்கிணங்க கட்டுநிதிகளை விடுவித்தல் தொடர்பான பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு விடுவிக்கப்படாத கட்டுநிதிப் பெறுமதியானது கட்டுநிதி எல்லையுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான 33 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் மூலதனச் செலவு கட்டுநிதிகளை விடுவிக்காத அளவு 20 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான 110 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறு அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கிற்காக கட்டுநிதிகள் விடுவிக்காத அளவு 20 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான 135 சந்தர்ப்பங்களாகும். மேலும் கட்டுநிதிகளை விடுவிக்கும் போது முன்னுரிமை அடிப்படையில் பணத்தை விடுவித்தல் இடம்பெற்றிருக்கவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

**(ஈ) தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதிகள்.**

திணைக்களத்தின் பிரதான செயற்பாடாகிய அரசாங்கத்தின் கட்டுநிதிக் கணக்கை ஆரம்பிப்பதற்காக அதிகாரம் வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களம் ஆரம்பித்த 06 கட்டுநிதி கணக்குகள் கணக்காய்வுத் திகதி வரையும் தீர்த்து வைக்கப்படாது காணப்பட்டதுடன் அவற்றின் தேறிய வரவு மீதிப் பெறுமதி ரூபா 736.66 மில்லியனாகும்.

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) நீதி அமைச்சின் தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 473.87 மில்லியனாக இருந்ததுடன் கட்டுநிதி மீதி 1997 இலிருந்து 2000 வரையான காலத்திற்குரியதாகும். அக்காலப் பகுதிகளில் நீதிமன்றங்களின் கணக்கு நடவடிக்கைகளுக்காக கணக்காளர்கள் இல்லாதிருந்ததனால் கணக்குகள் கணக்கிணக்கம் செய்யப்படாததன் விளைவாக இந்நிலைமை உருவாகியுள்ளதனால் நட்டத்தைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய அமைச்சினால் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் இப்பெறுமதியை நட்டமாகக் கருதி பதிவழிக்க இயலாது என அரசாங்க நிதித் திணைக்களத்தால் அந்த அமைச்சிற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய அமைச்சினால் மேற்கூறிய பெறுமதியை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு ரூபா 55 மில்லியன் பணம் 1355 ஆம் இலக்க அதிகாரத்தின் மூலம் உரிய செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ii) சனாதிபதி செயலகத்தின் கட்டுநிதிக் கணக்கில் கணக்காய்வுத் திகதி வரை ரூபா 45.28 மில்லியன் பணம் தீர்த்து வைக்கப்படாது காணப்பட்டது. இவ்வரவு வைத்தலானது சனாதிபதி செயலகத்திற்கு தெரியப்படுத்தப்படாது இடம்பெற்றதாகவும் இது தொடர்பான எதுவித தகவலும் சனாதிபதி செயலகத்தில் இல்லை என்பதுவும் அதன் பிரதான காசாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமான உரிய வரவு வைத்தலை சரி செய்வதற்கு திறைசேரி இணங்கியிருந்த போதிலும் இதுவரை அம்மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வெளி விவகார அமைச்சின் கட்டுநிதிக் கணக்கில் 2013 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 226.69 மில்லியன் மீதி 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) **அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ வங்கி கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாட்டின் வங்கி முறைமையை இணையதளப்படுத்தி தொடர்புபடுத்துவதுடன் அரசாங்க நிதி முகாமைத்துவத்தின் செயற்திறனையும் விளைதிறனையும் மிகவும் மேம்படுத்தக்கூடிய வகையில் அரசாங்க நிதி முகாமைத்துவ செயற்பாட்டில் முக்கியத்துவமான திறைசேரி தனித்தனி கணக்கு முறைமை 2007 ஆம் ஆண்டின் போது திறைசேரியினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி தனித்தனி கணக்கு முறைமையின் கீழ் (TSA) பேணப்பட்டு வந்த வங்கி கணக்குகள் 2343 ஆகும்.

(ii) அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் அமுல்படுத்தலை திறைசேரியின் தனித்தனிக் கணக்கு முறைமைகளின் கீழ் கொண்டுவந்ததன் காரணமாக நிதிக் கொடுக்கல் வாங்கல்களானது ஒப்பீட்டு ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆக்கபூர்வமாக இடம்பெறுவதற்கு வங்கி மேலதிகப்பற்று மற்றும் அதன் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்த வட்டிச் செலவுகளையும் குறைப்பதற்கும் உத்தியோகபூர்வ வங்கிக்கணக்குகளில் விளைவற்ற காசு மீதி (Idle cash balance) இருக்கும் நிலைமை உருவாகுவதனை தவிர்த்துக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு 2015 ஆம் ஆண்டிலிருந்து திணைக்களம் மற்றும் அமைச்சுக்களின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளில் ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட காசுமீதி காணப்பட்டமை, செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள் காணப்பட்டமை, அவ்வாறு ஏற்படுவதற்கு தாக்கமளிக்கும் நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக முறைப்படியான உள்ளக வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன் செயல் முன்னேற்றம் போதியளவில் மீண்டும் மீளாய்வு / பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்ததா என்பது கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க உரிய நோக்கங்களை அடைந்து கொள்வதுவும் சிக்கலுக்குரியதாகும். அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நிதி முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டத்தின் (Fiscal Management Efficiency Project) கீழ் அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (Integrated Treasury Management Information System) என்ற பெயரிலான கணனி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இதற்கான பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது என திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 22 | 20 | 03 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 01 | 01 | - | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 82 | 65 | 17 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 20 | 20 | - | - |
| | மொத்தம் | 125 | 106 | 20 | 01 |

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அரசாங்க நிதி மூலங்கள் மற்றும் அரசாங்க கடன்கள் சம்பந்தமான தரவுகளை செயன்முறைப்படுத்தலை உள்ளடக்கிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக அதிகளவான கடமைகளை மேற்கொள்கின்ற இத்திணைக்களத்தினுள் அங்கீகரிக்கப்பட்ட 07 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளில் 06 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமை கணக்காய்வின் போது பிரச்சனைக்குரியதாகும்.

(ii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு I/III இலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 08 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவிணியினர் 09 ஆகக் காணப்பட்டதால் 01 பதவி மிகையாகக் காணப்பட்டது.

(iii) மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்காக 2013 பெப்ரவரி 19 ஆந் திகதியிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மேல் அங்கீகாரத்தின் கீழ் அப்போதைய நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரால் ஒரு உத்தியோகத்தர் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். அதற்காக அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்து அமைச்சின் கணக்காளர் சேவைப் பிரிவினால் 2013 பெப்ரவரி 19 ஆந் திகதியிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கடமைகளை மேற்கொள்வதற்கு நியமிப்பதற்காக மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.